## மண்ணின் மைந்தன் திரு. சிதம்பரப்பிள்ளை இராசரத்தினம் அவர்கள்

க.சட்டநாதன், பட்டதாரி ஆசிரியர்

வேலணையூர் தந்த தவப்புதல்வர்களில் திரு.சிதம்பரப்பிள்ளை இராசரத்தினம் அவர்கள் முதன்மையானவர். சிறப்பானவர். ஆறடி உயரமுள்ள அந்த ஆஜானுபாகுவை நினைத்துப் பார்க்கின்றேன்.! நிமிர்ந்த நன்னடையும் கம்பீரமும் மிக்க அப்பெரியார், தலை தாழ்த்தி நடந்ததை நான் எப்பொழுதுமே பார்த்ததில்லை.

எனது சிறுபராயம் முதல் அவர் இயற்கை எய்திய இறுதி நாள்வரை,அவரைச் சந்தித்த சந்தர்ப்பங்களில் ஒரு பயங்கலந்த பக்திகள் என்னுள் பரவுவதுண்டு. ஒருவேளை அவரது தோற்றமும் குரலும் பேசும் தோரணையும் காரணமாகவே இருந்திருக்கக்கூடும்.

இப்பெரியாரைப் பற்றியஎனது இந்த முன்முடிவும் மனப்பதிவும் அவரது வாழ்க்கைக் குறிப்பான ''வாழ்வுச் சுவடுகள்'' எனும் நூலைப் படித்த பின்னர் - புறநிலை சாராத அவரது அகவுணர்வுக் கசிவுகளால் பெரிதும் மாற்றமடைந்துள்ளது.

அன்பு, அரவணைப்பு, அகங்காரமற்ற பெருமை, நெருக்கம், நெகிழ்ந்துருகும் நேசம், புதியதை நாடும் பண்பு, கருமம் சார்பற்றுறுதி, சகமனிதர் மீதான பரிவு, இறைபக்தி என்று எல்லாவற்றிலுமே முதன்மை நாட்டத்தையும் தன்னை இழந்து செயற்படும் பணியையும் நாம் இவரிடம் தரிசிக்க முடியும்.

இத்தகைய பண்பு வளத்துடன் கூடிய இம் மனிதரின் வாழ்க்கை, பல வெற்றிகளைக் கண்டதில் வியப்பேதுமில்லை. நல்ல மைந்தனாக, குடும்பத் தலைவனாக, ஆசிரியனாக, வைத்தியனாக, விவசாயியாக, சமூகத் தொண்டனாக இப்பெரியார் வாழ்ந்த அவரது சமகாலப் பெரியார்களுக்கு ஒருவகையில் முன்மாதிரியென்று கூறலாம்.

குடும்பத்தில் ஏக புத்திரனாகத் தோன்றிய இவர், பெற்றோருக்கும் உற்றாருக்கும் செல்லப்பிள்ளையாகவும் நண்பர்களுக்கு வழிகாட்டியாக வகைசொல்பவராகவும் விளங்கினார். தனது கல்வியை வேலணை மிஷன் பாடசாலையில் ஆரம்பித்த இவர் யாழில் உள்ள சேணியதெரு சன்மார்க்கப் போதனா வித்தியாசாலையிலும் கற்றார். வேலணை சரஸ்வதியில் மேல் வகுப்புக்களில் படித்துச் சித்தியடைந்த இவர் ஆங்கில மொழியின் மேன்மை கருதி சித்தங்கேணி சைவ ஆங்கில பாடசாலையிலும் பயின்றார்.

சென்ற நூற்றாண்டின் முப்பதுகளில் தனது ஆசிரியப் பணியை ஆரம்பித்த இவர் எழுபதுகளின் ஆரம்பத்தில் முதலாம் தர அதிபராக உயர்வுபெற்று: பணியாற்றி ஓய்வுபெற்றார். ஆசிரியராக அவரது பணி அளப்பரியது. அவரிடம் கற்ற மாணவச் செல்வங்கள் பலர் இன்று உயர்நிலை உத்தியோகத்தர்களாகவும் கல்வியாளர்களாகவும் உலகம் முழுவதும் பரவியிருப்பது நாம் நன்கு அறிந்த உண்மையாகும்.

துறைபோன வித்தகராகவும் துல்லியமான கல்விமானாகவும் இருந்தமையால் மிகச் சிறப்பான குடும்பத் தலைவராக இவரால் இருக்க முடிந்தது. இவரது துணைவியார் உருக்குமணி அவர்களும் நல்லாசிரியையாக இருந்தமை இவர்தம் பிள்ளைகள் கல்விப் புலமைபெற அரிய சூழலை அமைத்துக் கொடுத்துள்ளது.

இவரது தலைமகள் திருமதி புஷ்பா கணேசலிங்கம் அவர்கள் விஞ்ஞானப் பட்டதாரி. அத்துடன் முதுமானிப் பட்டமும் பெற்றவர். யாழ் செங்குந்தா இந்துக் கல்லூரியில் ஆசிரியப் பணியை ஆரம்பித்த இவர் பின்னர், அதிபராய், கல்வி அதிகாரியாய், பிரதிக் கல்விப் பணிப்பாளராய் பதவி வகித்து இளைப்பாறினார்.

அடுத்துப் பிறந்த இவரது மகளான திருமதி புஷ்பராசவதி சின்னையாவும் விஞ்ஞானப் பட்டதாரி. அத்துடன் முதுமானிப் பட்டதாரியும் கூட. இவர் பல பாடசாலைகளில் ஆசிரியராகக் கடமையாற்றிய பின்னர் உப அதிபராய், அதிபராய்ப் பணிபுரிந்தார். ஓய்வுபெற்ற பின்னர் தேசியக் கல்வி நிறுவனம் நடாத்தும் கல்வி டிப்ளோமா வகுப்புகளுக்கு விரிவுரையாளராகப் பணியாற்றினார்.

இவரது முதல் மகனான பேராசிரியர் இரா. சிவசந்திரன் அவர்கள் கல்வி கேள்விகளில் சிறந்தவர். நற்பண்பாளர். உற்றார், உறவினர், நண்பர்களுக்கு உடன் உதவும் இயல்பினர். கலை இலக்கியத்தில் மிகுந்த விருப்பும் ஈடுபாடுமுடையவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டப்படிப்பில் சித்தியடைந்து, களனிப் பல்கலைக் கழகத்திலும் பின்னர் யாழ் பல்கலைக்கழகத்திலும் புவியற்றுறை விரிவுரையாளராகக் கடமையாற்றியதுடன், பின்னர் பேராசிரியராகவும் பல்கலைக்கழக கலைப் பீடாதிபதியாகவும் கடமையாற்றி ஓய்வுபெற்றார். இவர் யாழ் பல்கலைக்கழக புறநிலைப் படிப்பு அலகின் செயற்பாட்டாளராக இருந்த காலத்து ஆற்றிய பணி என்றும் மனங்கொள்ளத்தக்கதாகும்.

இவரது ஏனைய பிள்ளைகளான திரு .இ. பாலச்சந்திரன், திரு.இ. ஜெயச்சந்திரன் ஆகியோர் வங்கியாளராகவும், ஒலிபரப்பாளராகவும் கடமையாற்றியமை நாம் அறிந்த ஒன்றாகும். ஏனைய பிள்ளைகளும் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்குவதோடு, தாய் தந்தையரின் பேர் விளங்கச் செயற்படுகிறார்கள்.

கற்ற குடும்பம் கல்வியாளர் பலர் நிரம்பிய குடும்பமென்பதால் இவரது மருமக்களும் பேரப்பிள்ளைகளும் வல்லமையில் சோடைபோனவர்கள் அல்லர். குலத்தின் பெருமை பேசக் கூடிய தகைமையாளர்களாகவே விளங்குகிறார்கள்.

‘‘கருவிலே திருவுடையார்’’ என்பது பெரியோர் வாக்கு, அதற்கமைவாக இவரது தந்தையார் திரு. வி. சிதம்பரப்பிள்ளைபோல வைத்தியத்தில் இவரும் மிகுந்த செல்வாக்கு மிக்கவராக விளங்கினார். மிகச் சிறுவயதிலேயே இவரது வைத்தியப் பணி தொடங்கிவிட்டது. நோயுற்ற சிறுகுழந்தை ஒன்றுக்கு மருந்து கொடுத்து, பரிகரித்து நோயிலிருந்து

அக்குழந்தையை இவர் காப்பாற்றினார். தகப்பனார் வீட்டில் இல்லாத வேளையில் இது நடந்தது. அன்று ஆரம்பமான இவரது வைத்தியப் பணி அவரது இறுதி மூச்சுவரை தொடர்ந்தது. செங்கண்மாரி நோய்க்கு வைத்தியம் செய்வதில் இவர் நிபுணத்துவம் மிக்கவராக விளங்கினார்.

இவர் வைத்திய சாஸ்திரத்தை தகப்பனாரிடம் இருந்தும் தனது சிறிய தந்தையார் திரு. வி. நடராஜபிள்ளை அவர்களிடமிருந்தும் கற்றுத் தெளிவு பெற்றுத் துறைபோன வித்தகரானார். 1944 ஆம் ஆண்டு வைத்தியராகப் பதவ ிபெற்ற இவர் 1984 இல் சித்த வைத்தியக் கலாநித ிஆகும் பேற்றினைப் பெற்றார். யாழ்ப்பாண அகில இலங்கை சித்த ஆயுள் வேத வைத்திய சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினராகவும் ''வைத்தியன்'' எனும் பத்திரிகையின் ஆசிரியராகவும் பணியாற்றியமை இவரது சிறப்புக்குச் சான்றுகளாய் அமைந்தவையாகும்.

வேலணை கருமண் பூமியாக இருப்பினும் விவசாயம் செய்வதற்கேற்ற தட்ப வெப்பத்தையும், நீர்வளத்தையும் உடைய பூமி. அந்த அருமந்த மண் தொட்டு வளம் பெருக்கியவர்களில் இவரும் ஒருவர். இளமைக் காலத்தில் நெற்பயிற் செய்கையில் மிகுந்த ஈடுபாடுடையவராக இருந்தார். 1950களில் - கிளிநொச்சி, கல்மடுவில் பயிர் செய்தமை இவரது கமக்கார வாழ்வின் மைல்கல் எனலாம். பின்னர் இவரது முயற்சிகள் பணப் பயிர்களான புகையிலை, மிளகாய், வெங்காயம் ஆகியவற்றை பயிரிடுவதிலேயே செலவாகியது.

விவசாய வழி வந்த செல்வத்தை அவர் தனது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கும், உற்றவர்களுக்கும் ,உதவிகோரி வந்தவர்களுக்கும் அதிக அளவு பயன்படுத்தினார். இவர் வேலணைக் கிராமசங்க உறுப்பினராக, தலைவராக, கூட்டுறவாளராக இயங்கியதோடு பயிர்ச் செய்கைக்குழு, சனசமூக நிலையங்கள், சமாசங்கள் ஆகியவற்றின் உயர்குழு உறுப்பினராகவும் செயல்பட்டார். ஒதுக்கப்பட்ட மக்களின் உரிமைக்காகப் போராடியவராகத் திகழ்ந்ததோடு, அவர்களது சிக்கல்களை, சிடுக்குகளை தீர்த்துவைப்பதில் சமர்த்தராகவும் சமநோக்குடையவராகவும் திகழ்ந்தார்.

இத்தகைய பெருமகனை நீதி அமைச்சு - ஊர்மக்கள், மன்றப் பிரதிநிதிகள், விருப்பத்திற்கமைவாக 1978 ஆம் ஆண்டு சமாதான நீதிவானாக நியமித்துக் கௌரவம் செய்துள்ளது. அவர் தம் சமூகப் பணிகளுக்கு அரசும், மக்களும் அளித்த சிறப்பான அங்கீகாரமாக இதனைக் கொள்ளலாம்.

இவரது தமிழ்ப் புலமையும் இலக்கியப் பணியும் குறித்து சொல்லக்கூடிய ஒன்றாகும். மரபுசார் கவிதைகளையே இவர் எழுதியபோதும் வீரியம் மிக்க மொழியாட்சியும் உயிர்ப்பும் செழுமையும் இவரது கவிதை மொழிக்கு உண்டு. கவிதை புனைவது மட்டுமல்ல இசையிலும், இசைப் பயிற்சியிலும் தனது இளமைக் காலத்தில் மிகுந்த ஈடுபாடுகாட்டி வந்துள்ளார்.

“புதியன விரும்பு”என்பது பாரதியின் புதிய ஆத்திசூடி. இவர் மாந்திரிகம், மனோவசியம் என தனது கற்றற்பரப்பை விரிவுபடுத்தியமை பிற்போக்குத் தனமானது எனக் கருதாமல் ஒருவகைப் புதுமை நாட்டமாகவே நாம் பார்த்தல் வேண்டும். தீர்க்கமான முருக பக்தரான இவர் உருவ வழிபாட்டை ஒதுக்கி, குரு மகராஜ் அவர்களைக் குருவாக ஏற்றுக கொண்டமை கூட சற்று வித்தியாசமாக எதையும் செய்து பார்க்க வேண்டுமென்ற அவரது ஆர்வத்தையே காட்டுகிறது.

அஷ்டாவதானியும் பன்முக வீச்சும் கொண்ட இவர் அடிப்படையில் வேலணை மண்ணின் மைந்தனாகவே வாழ்ந்தார். இடப்பெயர்வும், அதனடிப்படையான துயர்மிகு வாழ்வும் அவரைப் பெரிதும் பாதித்தன. இழந்த விழுமியங்களையும் நமது வேலணையும் வேலணை மக்களும் பெற்றிட வேண்டுமென்பது அவரது நெடுங்கனவாகும். அவரது கனவு மெய்ப்பட வேண்டும். அதற்கு ஊரவராகிய நமது பணி அயர்வற்றதாக இருக்க வேண்டும். அவ்வழி முயல்வது நமது கடமையாகும்.

மீளவும் ஒருமுறை அந்த ஆஜானபாகுவை திரண்ட உதடுகளுடனும் விசாலித்த கண்களுடனும் தடித்த வில்லைகளுடைய மூக்குக் கண்ணாடியுடனும் நினைவு கூர விழைகின்றேன். அவ்வாறு நினைவு கூரும் வேளை எனது உடல் புளகாங்கிதமுறுவதையும் மனம் மட்டிட முடியாத அளவு பெருமையுறுவதையும் என்னால் உணர முடிகின்றது. அவரது நாமம் நமது ஊர் மக்களின் நெஞ்சங்களில் நீடு வாழும் எனும நம்பிக்கை எனக்கு நிரம்பவும் உண்டு.

தகவல்: பேராசிரியர் இரா. சிவசந்திரன் அவர்கள்